# <u>இயல்பு கூட்டப்பொருட்கள்</u>

1. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35–ல் கோட்டார் சவேரியார் கோவில் சந்திப்பில் 19.10.2017–ம் தேதி சில துப்புரவு பணியாளர்கள் பாதாள சாக்கடையில் இறங்கி கையால் சுத்தம் செய்ததாக தெரிவித்து, கோட்டார் உச்சிமாகாளி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த திரு.K.குமரேசன், த/பெ கிருஷ்ணன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதை தொடர்ந்து, மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் அதனை பொது நல வழக்காக ஏற்றுக்கொண்டு விசாரணைக்கு பட்டியலிடுமாறு மதுரை உயர்நீதிமன்ற கிளை கூடுதல் பதிவாளர் ஜெனரலுக்கு பரிந்துரைக்கப்பட்டு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பதிவாளர் (நீதித்துறை) சார்பில் (SUO MOTO) W.P(MD) No.24243/2017 எண்ணில் பொது நல மனுவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் மீது நகராட்சி சார்பில் ஆஜராகும் பொருட்டு கூடுதல் அட்வகேட் ஜெனரல் (A.A.G) திரு.புகழேந்தி அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும், அதற்க்குண்டான வழக்கு செலவினத்திற்கு அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.15836/2017/எச்1

**தீர்மானம் எண். 4 – அங்கீகரிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்குட்பட்ட புல எண் D10/69 புத்தன் பங்களா ரோடு அரசுபுறம்போக்கு பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற கோரி திரு.M.S.வேணுகோபால் என்பவர் மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு O.S.338/2017 IA 711/17 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 1.திரு.ஈஸ்வரபிள்ளை, 2.திரு.பொன்னம்மாள், 3.நகராட்சி ஆணையாளர் ஆகியோர்களை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்டுள்ளது. நகராட்சி சார்பில் வழக்கில் ஆஜராகவும் வழக்கினை நடத்தவும் நகராட்சி வழக்கறிஞரிடம் வழக்கு ஒப்படைத்தமைக்கும் வழக்கிடை செலவுகள் மற்றும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.15667/2017/எப்1

**தீர்மானம் எண். 5 – அங்கீகரிக்கப்பட்டது.**

3. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2016–2017 –ன் கீழ் வார்டு எண்.37, வடலிவிளை வயல் தெருவில் ரூ.2,50,000/–ல் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் மற்றும் சிறு மின் விசை திட்டம் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சியர் கன்னியாகுமரி அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/4592/2016, நாள்.10.10.2017–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி கடந்த 15.12.2017–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. திருமதி.M.ஹெப்சிபாய் மதிப்பீட்டை விட 23.83% குறைவு
2. திரு. T.துரை மதிப்பீட்டைவிட 15.11% குறைவு
3. திரு.T.நேசமணி மதிப்பீட்டைவிட 4.00% குறைவு

மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 23.83% குறைவாக திருமதி. M.ஹெப்சிபாய் கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்பு தொகை ரூ.29,788/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.126/17–18

**தீர்மானம் எண். 6 – அங்கீகரிக்கப்பட்டது.**

4. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017–2018–ன் கீழ் வார்டு எண்.39, வல்லன்குமாரவிளை, சுடலைமாடசுவாமி கோவில் அருகில் ரூ.2,50,000/– மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் மற்றும் சிறு மின் விசை திட்டம் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ3/2139/2017 நாள்.09.11.2017–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 15.12.2017–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. திருமதி.M.ஹெப்சிபாய் மதிப்பீட்டை விட 23.83% குறைவு
2. திரு. T.துரை மதிப்பீட்டைவிட 15.11% குறைவு

மேற்கண்டவாறு குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 23.83% கொடுத்துள்ள திருமதி. M.ஹெப்சிபாய் என்பவரது விலை விகிதத்தை ஏற்று கூடுதல் வைப்புத்தொகை ரூ. 29,788/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.127/17–18

**தீர்மானம் எண். 7 – அங்கீகரிக்கப்பட்டது.**

5. இந் நகராட்சி பகுதியில் TURIP 2017–2018–ன் கீழ் சாலை பணிகள் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் நாளேட்டில் பிரசுரம் செய்த வகைக்கு Ravi Publicity Service Chennai நிறுவனத்திற்கு ரூ.52,788/– வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.12478/2017/இ3

**தீர்மானம் எண். 8 – அங்கீகரிக்கப்பட்டது.**

6. இந் நகராட்சி பயன்பாட்டிற்கு தேவையான 25 எண்ணம் டிப்பர் ஆட்டோக்கள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கொடை ஆட்டோ மொபைல்ஸ் திருநெல்வேலி நிறுவனத்தால் வினியோகம் செய்த வாகனங்களில் குறைபாடுகளை சரி செய்ய கேட்டதை ஆட்சேபம் செய்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்.WP(MD)No:17198 of 2017 நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடிய வகைக்கு திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/ வழங்க கேட்டுள்ளார் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.21962/2015/இ3

**தீர்மானம் எண். 9 – அங்கீகரிக்கப்பட்டது.**

7. இந் நகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையிலிருந்து கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் 800mm குழாயில் அறுகுவிளை பகுதியில் பழுது ஏற்பட்டு குடிநீர் அதிகமாக விரையமாவதால் அதனை சரி செய்ய குடிநீர் அவசியத்தினை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் திரு.P.முரளிதரன் ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்யவும் அதற்காகும் செலவினம் ரூ.64,500/–க்கும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.736/2018/இ2

**தீர்மானம் எண். 10 – அங்கீகரிக்கப்பட்டது.**

8. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளும் 16 மண்டலங்களாக (DIVISIONS) ஆக பிரிக்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. இதில் நகராட்சியின் 52 வார்டுகளிலும் ஓடைகளில் வாறுகால் மண் எடுக்கும் பணியும், தனியார் துப்புரவு பணி மேற்கொள்ளப்படும் வார்டுகள் தவிர்த்து ஏனைய 19 வார்டுகளிலும் குப்பைகள் அகற்றும் பணியும் நகராட்சி லாரிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் லாரிகள் பழுது ஏற்பட்டு பணிமனைக்கு சென்றாலோ அல்லது தகுதிச் சான்று பெறுவதற்கு வாகனங்கள் பணிமனைக்கு சென்றாலோ அன்றாடம் குப்பைகளை சேகரம் செய்வதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதுடன், பொது சுகாதாரத்திலும் பெருமளவு பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே தற்போது 2 லாரிகள் (TN74L5166, TN74L 5167) தகுதிச் சான்று பெறுவதற்காக பணிமனைக்கு சென்றுள்ளதால், சுகாதாரப் பணி மேற்கொள்வது மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே தினசரி வாடகைக்கு 2 டிராக்டர்கள் வாடகைக்கு எடுத்து பயன்படுத்துவதற்கும், நாள் ஒன்றிற்கு 8 மணி நேரம் 4 நடைகளுக்கு (Trips) ரூ.2900/– ஆகும். மேற்படி பணியினை அக்ரோ சர்வீஸ் மூலம் 3 மாத காலத்திற்கு மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினங்களுக்கும், வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டிடவும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.11931/2016/எச்2

**தீர்மானம் எண். 11 – அங்கீகரிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23–ல் உள்ள பள்ளவிளை கங்கா நகரில் தடுப்புச் சுவர் கட்ட மதிப்பீட்டு எண்.178/15–16–ற்கு 18.08.2015 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு.R.ராஜ் என்பவர் மதிப்பீட்டை விட 25.00% குறைவாக எடுத்துள்ளார். மன்ற தீர்மானம் எண்.1035/ dt.15.10.2015 –ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூடுதல் வைப்புத்தொகையாக ரூ.76,250/– (Chellan No. 150054543 dt.03.02.2016) செலுத்திய பின்னர் 16.02.2016 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி தற்போது பணி செய்ய காலதாமதம் ஆவதாலும், நகராட்சியில் நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினாலும் மேலும் காலதாமதமாகும் என்பதால் இப்பணியினை எடுத்த ஒப்பந்தக்காரர் திரு.R.ராஜ், என்பவர் தான் செலுத்தியுள்ள 1% முன் வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை திருப்பி தரும்படி கோரியுள்ளார். அதன்படி அவர் செலுத்தியுள்ள 1% முன்வைப்புத்தொகை ரூ.6100/– கூடுதல் வைப்புத்தொகை ரூ.76,250/–யும் திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.178/15–16/இ1

**தீர்மானம் எண். 12 – அங்கீகரிக்கப்பட்டது.**

**10.** இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN74AL.1852- க்கு ஆறாவது ஆயில் சர்வீஸ் கீழ்கண்ட பணிகள் செய்வதற்க்கு உத்தேச செலவு ரூ.9710/– அனுமதி வேண்டப்படுகிறது.

1. இஞ்சின் ஆயில்
2. ஆயில் பில்டர், டீசல் பில்டர்
3. வீல் அலையன்மென்ட், வில்பேலனஸ்
4. நான்கு வீல் பிரேக் செக்கப்
5. ஏர் பில்டர்
6. வாட்டர் சர்வீஸ், கூல்லான்ட் ஆயில்

மேற்கண்ட பணிகளை செய்வதற்க்கு அரசு அங்கீகாரம் பெற்ற கொடை கார்ஸ்(பி) லிட் நாகர்கோவில் நிறுவனத்தின் விலைப்புள்ளி ரூ.9709/– ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்க்கு வேலை உத்தரவு வழங்கி பணி செய்ததையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.973/2018/இ2

**தீர்மானம் எண். 13 – அங்கீகரிக்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சிக்கு சொந்தமான TN74 2093 தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் 3.2.2018 அன்று தகுதி சான்று முடிவடைவதால் புதியதாக தகுதி சான்று பெற தயார் செய்யப்பட்ட உத்தேச செலவுத் தொகை ரூ.33,000/–க்கு அங்கீகாரத்திற்காக.

**பணியின் பெயர்:**

1. Fuel Service
2. இஞ்சின் ஆயில் மாற்றுதல்
3. டிங்கர் வேலை செய்தல்
4. Battery டிரக்டர் செய்து மாட்ட
5. சைடு மிரர்
6. எலக்ரிக் செக்கப்
7. பெயின்ட் செய்தல்
8. 4 வீல் கழற்றி கிரீஸ் வைக்க
9. வீல் ஜாயின்ட் ஸ்டார் வேலை செய்தல்.

மேற்கண்ட பணியினை செய்ய அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.685/2018/இ2

**தீர்மானம் எண். 14 – அங்கீகரிக்கப்பட்டது.**

12. இந்நகராட்சி வார்டு எண்கள்.38, 39, 40, 41, 46, 47, 48, 49, 50, 51 மற்றும் 52 மண்டலம் IV உட்பட்ட பகுதிகளில் உள்ள போர்வெல்களில் ஏற்படும் பழுது வேலைகளை உடனுக்குடன் சரி செய்தும் பழுதடைந்த மின் மோட்டார்களுக்கு பதிலாக புதிய மின் மோட்டார்களை பொருத்தவும் மின் சாதனங்களை மாற்றம் செய்து புதிதாக பொருத்தி இயக்குவதற்கு ஓராண்டிற்கு பராமரிப்பு பணி செய்ய 05.01.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

1. Spark Blue Metal - மதிப்பீட்டைவிட 9.81% குறைவு
N. Sivaprakash

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 9.81% குறைவாக கொடுத்துள்ள Spark Blue Metal நிறுவனத்திற்கு கூடுதல் வைப்பு தொகை ரூ.60871/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

மன்றம் எண்.140/2017–18

**தீர்மானம் எண். 15 – அங்கீகரிக்கப்பட்டது.**

13. இந்நகராட்சி வார்டு எண்கள்.25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 மற்றும் 37 மண்டலம்–III உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆள்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பழுதடைந்த மின் மோட்டார்களுக்கு பதிலாக புதிய மின் மோட்டார்கள் பொருத்துதல், பழுதான மின் சாதங்களை மாற்றுதல் பணிகளை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள கடந்த 05.01.2018–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

1. Sparle Blue Metal (N.Sivaprakash) மதிப்பீட்டைவிட 9.49% குறைவு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட குறைவாக 9.49% –க்கு Sparle Blue Metal (N.Sivaprakash) கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்பு தொகை ரூ.53,998/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

மன்றம் எண்.139/2017–18

**தீர்மானம் எண். 16 – அங்கீகரிக்கப்பட்டது.**

14. இந்நகராட்சி வார்டு எண்கள்.16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 42, 43, 44 மற்றும் 45 மண்டலம் –II பகுதிகளில் உள்ள ஆள்துளை கிணற்றில் ஏற்படும் பழுதுகள் பழுது அடைந்த மின் மோட்டார்களுக்கு பதிலாக புதிய மின் மோட்டார்கள் பொருத்தவும் பழுதடைந்த மின் சாதங்களை மாற்றிடவும் ஓர் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் கடந்த 05.01.2018–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

1. Sparle Blue Metal (N.Sivaprakash) - மதிப்பீட்டைவிட 9.49% குறைவு

2. T. Thanga pandian - மதிப்பீட்டைவிட 4.99% குறைவு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட குறைவாக 9.49% –க்கு Sparle Blue Metal (N.Sivaprakash) என்பவர் கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்பு தொகை ரூ.62,160/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

மன்றம் எண்.138/2017–18

**தீர்மானம் எண். 17 – அங்கீகரிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சி வார்டு எண்.1, 2, 3, 4, 5, 6,7, 8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 மண்டலம் –I உள்ள ஆள்துளை கிணறுகளில் உள்ள பழுது வேலைகள் மற்றும் மின் சாதனங்களில் ஏற்படும் பழுது பணிகளை சரி செய்யவும் பழுதடைந்த மின் மோட்டாருக்கு புதிதாக மின் மோட்டார் பொருத்தவும் ஓராண்டிற்கு பராமரிப்பு பணிகள் செய்ய கடந்த 05.01.2018–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

1. Sparle Blue Metal (N.Sivaprakash) - மதிப்பீட்டைவிட 10.27% குறைவு

2. C. Chandrasekar - மதிப்பீட்டைவிட 4.53% குறைவு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட குறைவாக 10.27% குறைவாக Sparle Blue Metal (N.Sivaprakash) என்பவர் கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்பு தொகை ரூ.58,796/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

மன்றம் எண்.137/2017–18

**தீர்மானம் எண். 18 – அங்கீகரிக்கப்பட்டது.**

16. இந் நகராட்சி வார்டு எண். 19, வேதநகர் சர்ச், வார்டு எண்.24, பெருவிளை சானல்கரை வார்டு எண்.38, கிருஷ்ணாசாலை மற்றும் ஹவ்வா நகர் வார்டு எண்.48, சரலூர் ஆகிய இடங்களில் உள்ள ஆள்துளை கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் இயங்காமல் முற்றிலும் பழுதடைந்து உள்ளதால் மேற்படி ஆள்துளை கிணறுகளில் புதிய மின் மோட்டார்கள் பொருத்த குடிநீர் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் திரு.N.சிவபிரகாஷ் என்பவர் மூலம் ரூ.2,30,000/– மதிப்பீட்டில் பணி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.845/2017/இ2

**தீர்மானம் எண். 19 – அங்கீகரிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சி வார்டு எண்கள்.1, 2, 3, 4, 5, 7, 8, 9, 10, 12, 18, 19, 20, 21, 22, 23, 26, 27, 28, 30, 37, 38, 42, 43, 48 மற்றும் 52 ஆகிய பகுதிகளில் உள்ள ஆள்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள் மற்றும் இதர மின் சாதன பொருட்கள் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் குடிநீர் முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் திரு. N.சிவபிரகாஷ் என்பவர் மூலம் மேற்கண்ட பழுது பணிகள் ரூ.3,23,000/– மதிப்பில் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.846/2017/இ2

**தீர்மானம் எண். 20 – அங்கீகரிக்கப்பட்டது.**

18. இந்நகராட்சி வார்டு எண்கள்.1, 5, 6, 8, 10, 12, 13, 14, 17, 18, 19, 20, 22, 23, 24, 25, 27, 39, 41, 43, 51 ஆகிய பகுதிகளில் உள்ள ஆள்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள் மற்றும் இதர மின் சாதன பொருட்களில் பழுது ஏற்பட்டு மின் மோட்டார் இயக்க முடியாத நிலையால் குடிநீர் வினியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே

குடிநீர் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் ரூ.2,77,000/— மதிப்பீட்டில் திரு. N.சிவபிரகாஷ் என்பவர் மூலம் பழுதுகள் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.847/2017/இ2

**தீர்மானம் எண். 21 – அங்கீகரிக்கப்பட்டது.**

19. இந்நகராட்சி வார்டு எண்கள். 1, 8, 12, 13, 14, 20, 22, 24, 27, 39, 40 மற்றும் 48 ஆகிய பகுதிகளில் உள்ள ஆள்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள் மற்றும் இதர மின் சாதன பொருட்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் அவசியம் கருதி உடனடியாக சரி செய்ய வேண்டியுள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் திரு. N.சிவபிரகாஷ் என்பவர் மூலம் ரூ.2,63,000/— மதிப்பீட்டில் பணி செய்தது அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.844/2017/இ2

**தீர்மானம் எண். 22 – அங்கீகரிக்கப்பட்டது.**

20. இந்நகராட்சி வார்டு எண்கள். 6, 12, 18, 19, 33, 37 மற்றும் 47, சிவராம் கல்யாண மண்டபம், பாறைக்காமடம், பரசுராமன் தெரு, கன்னம்குளம் கோவில் முத்துமஹால் பின்புறம், லதா மருத்துவமனை பின்புறம் மற்றும் அழகம்மன் கோவில் மற்றும் ஈஸ்வரபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆள்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள் பழுது ஏற்பட்டு முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால் குடிநீர் வினியோகம் முழுவதும் மேற்படி பகுதிகளில் தடைபட்டுள்ளது. எனவே குடிநீர் அவசியம் கருதி ரூ.2,27,000/— மதிப்பீட்டில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் திரு. N.சிவபிரகாஷ் என்பவர் மூலம் புதிய மின் மோட்டார்கள் வாங்கி பொருத்துவதற்கு அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.848/2017/இ2

**தீர்மானம் எண். 23 – அங்கீகரிக்கப்பட்டது.**

21. நாகர்கோவில் நகராட்சி 52 வார்டுகளை கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாகும் இதில் 19 வார்டுகளின் துப்புரவு பணியானது நகராட்சி மூலமாகவும் மீதமுள்ள 33 வார்டுகளின் துப்புரவு பணியானது SRP Clean Enviro Pvt.Ltd, மூலமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார்மயமாக்கப்பட்ட 33 வார்டுகளில் மேற்படி நிறுவனமானது 12.12.2013 முதல் அனைத்து துப்புரவு பணியினையும் முறையே 258 துப்புரவு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்தல், 25 ஆட்டோ மற்றும் 2 டம்பர் பிளைசர், 3 டிம்போ, 2 காம்பேக்டர் ஆகிய வாகனங்கள் மூலமாக சேகரித்து உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லுதல் ஆகிய திடக்கழிவு மேலாண்மை பணிகளை Tipping Fee அடிப்படையில் 686 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வருட உயர்வு தொகை 10 சதவீதம் என்ற அடிப்படையிலும் செயல்படுத்தி வருகிறது.

11.12.2016 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததையொட்டி ஒப்பந்த அடிப்படையில் மனித சக்தி மட்டும் பெற்று துப்புரவு பணி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி வழங்கக்கோரப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து அனுமதி வரப்பெறாததால் பொது நலன்கருதி மேற்படி தனியார் பராமரிப்பிற்கு 12.02.2016 முதல் 12.03.2017 வரை, 13.03.2017

முதல் 12.06.2017 வரை, 13.06.2017 முதல் 12.09.2017 வரை மற்றும் 13.09.2017 முதல் 12.10.2017 வரை கூடுதலாக கால நீட்டிப்பு செய்து மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.K.Dis.No.7883/P3/2017, நாள். 02.08.2017 –ன் படி 373 பணியாளர்களை கொண்டு மனித சக்தி மட்டும் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய 777 லட்ச மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் 10.08.2017–ல் E-Tender மற்றும் மாநில செய்தி மலர் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டு 20.09.2017 –ல் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இந்நிலையில் 20.09.2017–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை உயர்நீதிமன்ற மதுரை கிளை தடையாணை பிறப்பித்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. அதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மானம் எண்.802 நாள்.29.11.2017–ல் 13.10.2017 முதல் 12.01.2018 வரை மூன்று மாத காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டதை மன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எனவே நீதிமன்ற உத்தரவு கிடைக்கப்பெற்று ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி தொடங்கும் வரை மேலும் மூன்று மாத கால அளவிற்கு (13.01.2018 முதல் 12.04.2018 வரை) கால நீட்டிப்பு செய்திட அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.18831/2012/எச்1

**தீர்மானம் எண். 24 – அங்கீகரிக்கப்பட்டது.**

22. இந்நகராட்சியின் துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் அண்ணா பேருந்து நிலையத்தில் இயங்கி வந்ததை பொது மக்கள் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் முறைகேடாக கடையாக ஒதுக்கீடு செய்து உள்ளதை ரத்து செய்து மீண்டும் பொதுமக்கள் நலன் கருதி துப்புரவு ஆய்வர் அலுவலகம் அதே இடத்தில் அமைத்திடும் பொருட்டு அண்ணா பேருந்து நிலைய கடை எண்.9, வரிவிதிப்பு எண்.2014418–ன் குத்தகை உரிமம் ரத்து செய்து திரு.அஜீ செல்வம் என்பவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி கடை சம்மந்தமாக நகராட்சி வழக்கறிஞர் திரு.ஹரிஹரன் அவர்களின் வழியாக நாகர்கோவிலில் உள்ள மூன்று நீதி மன்றங்களில் கேவியட் தாக்கல் செய்திடவும், அதற்கான செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.5350/2008/அ13

**தீர்மானம் எண். 25 – அங்கீகரிக்கப்பட்டது.**

23. நாகர்கோவில் நகராட்சியில் நில அளவை பணியாளர்களின் நில அளவு செலவு தொகை மற்றும் ஓய்வூதிய பங்கு தொகை 2015–2016 –க்கு கேட்பு ரூ.7,09,740 /– மற்றும் ரூ.1,37,160/– 2016–2017–ம் ஆண்டிற்கு கேட்பு ரூ.4,36,900/– மற்றும் ரூ.83,597/– மொத்தம் ரூ.13,67,397/– நில அளவை அலுவலகத்திற்கு வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.9288/2001/எப்1

**தீர்மானம் எண். 26 – அங்கீகரிக்கப்பட்டது.**

24. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48–ல் அனாதைமடம் பகுதியில் NULM திட்டத்தின் கீழ் வீடு இல்லாதவருக்கு Namma இல்லம் கட்டிடம் கட்டும் பணி ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் குடிநீர் பணிகள் மற்றும் Fencing பணி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2,70,000/–க்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.1159/2018/இ1

**தீர்மானம் எண். 27 – அங்கீகரிக்கப்பட்டது.**

**25.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**50**–ல் லிட்டில் பிளவர் தெரு மற்றும் மேரி தெருக்களில் தார்தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**6,00,000/**–க்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.**99/2018/**இ**1**

**தீர்மானம் எண். 28 – அங்கீகரிக்கப்பட்டது.**

**26.** நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட **52** வார்டுகளிலும் 'டெங்கு நோய்' பரவாமல் தடுக்கும் விதமாக டெங்கு காய்ச்சல் உருவாக்கும் புழுக்களை கண்டறிந்து மருந்துகள் தெளித்து அழிக்கும் பணியினை **204** D.B.C பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் தொடர்ந்து இப்பணியினை செய்து வருவதால் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகிறது. நோய் மீண்டும் பரவாமல் தடுக்கும் விதமாக தொடர்ந்து இப்பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேலும் ஆறு மாதங்களுக்கு அதாவது July 2018 வரை நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினம் **204** x **360** x **180** நாட்கள் = ரூ.**1,32,19,200/**–ற்கு சம்மந்தப்பட்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.**23313/2012/**எச்**4**

**தீர்மானம் எண். 29 – அங்கீகரிக்கப்பட்டது.**

**27.** இந்நகராட்சிக்கு சொந்தமான JCB 200 (Bock line) வாகனத்திற்கு மின் கலப்பெட்டி வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் **2** ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | Ashwin Battery Service<br>Pattakasalian vilai, Kottar<br>Nagercoil | ரூ.**22,000/**– |
| 2 | Sri Raghavendra Battery Invertor<br>Beach Road, Nagercoil | ரூ.**23,000/**– |

இதில் Ashwin Battery Service, Kottar, Nagercoil என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவானது என்பதால், சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு 'விநியோக உத்தரவு' வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.**15068/2016/**எச்**2**

**தீர்மானம் எண். 30 – அங்கீகரிக்கப்பட்டது.**

**28.** இந்நகராட்சி வாகனம் TN74R 3406–ற்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**30,000/**–ற்கும், நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான 'கோடை காரீஸ் பிரைவேட் லிமிடெட் பாளையங்கோட்டை' நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்624/2011/இ3

**தீர்மானம் எண். 31 – அங்கீகரிக்கப்பட்டது.**

29. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN74L 5167-ற்கு மின் கலப்பெட்டி வாங்குவது தொடர்பாக மன்ற அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.
அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | அஸ்வின் பேட்டரி சர்வீஸ்<br>ஏ.ஆர்.பி. கேம்ப் ரோடு,<br>பட்டகசாலியன் விளை,<br>நாகர்கோவில் | ரூ.7000/– |
| 2 | ஸ்ரீராகவேந்திரா பேட்டரி & இன்வெர்ட்டர்<br>தேவா காம்ப்ளெக்ஸ், பீச்ரோடு,<br>நாகர்கோவில் | ரூ.7500/– |

இதில் அஸ்வின் பேட்டரி சர்வீஸ், நாகர்கோவில் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது என்பதால் மேற்படி நிறுவனத்திற்கு 'பணி உத்தரவு' வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.3457/2016/எச்2

**தீர்மானம் எண். 32 – அங்கீகரிக்கப்பட்டது.**

30. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN74 L 5167தகுதிச்சான்று பெறுவதற்கு ஏதுவாக மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்யவும், இதற்கான செலவினம் ரூ.98,000/–ற்கும் சம்மந்தப்பட்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும்அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.3457/2016/எச்2

**தீர்மானம் எண். 33 – அங்கீகரிக்கப்பட்டது.**

31. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN74 L 5166-ற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு ஏதுவாக பழுதுப்பணிகள் மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.38,600/–ற்கும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 15848/2016/எச்2

**தீர்மானம் எண். 34 – அங்கீகரிக்கப்பட்டது.**

32. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 29.10.2017 இரவு மற்றும் 30.11.2017–ல் ஒகி புயலால் வேரோடு சாய்ந்த மரங்களை 02.12.2017 முதல் 06.12.2017 வரை 5 தினங்கள் தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குனர் திருமதி.ஜோதிநிர்மலா அவர்கள் அறிவுரைபடி நகராட்சி பகுதியில் பொது மக்களின் போக்குவரத்திற்கு தடையில்லாமல் இருக்க வெளி மாவட்டங்களில் இருந்து பணியாளர்களை கொண்டு மின் அறுப்பான் மூலம் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டமைக்கு ரூ.77,500/– திரு.S.நைனார் பாண்டியன் என்பவருக்கு வழங்க

கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மற்றும் திட்ட இயக்குனர், நாகர்கோவிலின் கடிதம் எண்.ஆ3/371/2017, நாள்.13.12.2017–ன் படி கேட்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை சுற்றறிக்கை எண்.14667/2016/இ2, நாள்.08.12.2017–ல் நகராட்சி பகுதியில் சேதமடைந்து விழுந்த மரங்களை நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் மூலம் அப்புறப்படுத்தவும் செலவினத்தை பொது நிதியில் செலவிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தொகை வழங்க அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 15323/2017/இ2

**தீர்மானம் எண். 35 – அங்கீகரிக்கப்பட்டது.**

**33.** இந்நகராட்சிக்கு மூன்றாவது குடிநீர் அபிவிருத்தி திட்டம் AMRUT திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் மானியம் போக மீதம் உள்ள தொகை ரூ.52.46 கோடி TNUDF/ Projectes / Nagercoil / WSIS Dated 09.10.2017 கடிதத்தின்படி கடன் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட நிதி பங்களிப்பின்படி திட்டம் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதி நிதி சேவை நிறுவனத்தின் கடிதம் எண். TNUDF/ Projectes / Nagercoil / WSIS Dated 09.10.2017–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு கடன் பெறுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

| SL No. | Means of Finance | Amount / Rs. in crores | Percentage |
|---|---|---|---|
| 1. | Loan from TNUDF Under World Back assisted TNSUDP | 52.46 | 22.61% |
| 2. | Grant from Government of India Under AMRUT (SAAP-1) | 111.72 | 48.14% |
| 3. | Grant from Government of Tamil Nadu Under AMRUT (SAAP-1) | 44.68 | 19.25% |
| 4. | ULB Contribution | 23.21 | 10.00% |
| 5. | Total Project cost | 232.07 | 100.00% |
| 6. | O&M Cost for five years | 19.36 | - |
| 7. | Project cost including O&M Cost for 5 years | 251.43 | - |

மேற்கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு Agreement and Tripartite Agreement –ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், மன்றம் அனுமதி வழங்கலாம் ESCROW கணக்கு Indian Bank, Nagercoil –ல் கிளையில் துவங்கப்பட்டுள்ளதில் பண பரிமாற்றங்கள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 22185/2015/இ3

**தீர்மானம் எண். 36 – அங்கீகரிக்கப்பட்டது.**

34. இந்நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் 26.01.2018 அன்று குடியரசு தினவிழா கொண்டாடபட உள்ளதால் மேற்படி இடத்தில் குடிநீர் வசதி, மற்றும் கழிப்பறை வசதி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.30,000/–க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி எண் 1920 பிரிவு 15–ன் கீழ் ஒப்பந்தக்காரர் திரு.T.துரை என்பவர் மூலம் மேற்படி பணியினை செய்தது பதிவிற்கும் அங்கீகாரத்திற்கும்.

கோப்பு எண். 1812/2018/இ1

**தீர்மானம் எண். 37 – அங்கீகரிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சி அலுவலகத்தில் 26.01.2018 அன்று குடியரசு தினவிழா கொண்டாடப்பட உள்ளதால் பந்தல், அலங்கார மின் வசதி, கொடி அமைத்தல், இருக்கை வசதிகள் செய்தல் மற்றும் கொடி கம்பம் சுற்றியுள்ள பகுதியில் பெயின்ட் அடிக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.30,000/–க்கு அனுமதியும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி எண்.1920 பிரிவு 15–ன் கீழ் ஒப்பந்தக்காரர் திரு.T.துரை என்பவர் மூலம் பணி செய்ததையும் பதிவிற்கும் அங்கீகாரத்திற்கும்.

கோப்பு எண். 1813/2018/இ1

**தீர்மானம் எண். 38 – அங்கீகரிக்கப்பட்டது.**

36. இந்நகராட்சிக்குட்பட்ட வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள கழிவு நீர் பஸ் நிலையத்தின் வடக்கு பகுதியில் பாய்வதால் மேற்படி இடத்தில் வட்டு இறக்கி கவர்சிலாப் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,000/– (எட்டாயிரம்) அங்கீகாரத்திற்காகவும், மேற்படி பணியினை செய்வதற்கு மூன்று விலைப்புள்ளிகளின் விபர பின்வருமாறு.

| விலைப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1 | ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன்<br>82, இருளப்பபுரம் | ரூ.7996/– |
| 2 | வைகுண்டராஜ்,<br>1/72A1, ஆத்திகாட்டுவிளை | ரூ.8028/– |
| 3 | சோமன் பிளம்பிங் ஒர்க்ஸ்<br>நாகர்கோவில் | ரூ.8333/– |

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.10678/2017/இ1

**தீர்மானம் எண். 39 – அங்கீகரிக்கப்பட்டது.**

37. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN74 AL 1924 –ற்கு சர்வீஸ் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்வதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.5000/–க்கு அனுமதியும்,

மேற்படி பணி செய்வதற்கு கொடை கார்ஸ்(பி) லிமிடெட் நாகர்கோவிலுக்கு வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 1704/2018/இ2

**தீர்மானம் எண். 40 – அங்கீகரிக்கப்பட்டது.**

38. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள 260 கடைகளுக்கும் 29.06.2017 அன்று ஏலம் நடைபெற உள்ளதால் அன்றைய தினம் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் நிகழ்வுகளை வீடியோ எடுத்து 2CD போடுவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.5000/–க்கு (ஐயாயிரம்) அனுமதியும், மேற்படி பணியினை செய்வதற்கு மூன்று விலைப்புள்ளிகள் பெற்றதன் விபரம் பின்வருமாறு.

| விலைப்புள்ளிகளின் விபரம் | | |
|---|---|---|
| 1 | சாஸ்தா ஸ்டுடியோ<br>கோட்டார் | ரூ.5000/– |
| 2 | ஸ்ரீநாராயணா போட்டோஸ்<br>கோட்டார் | ரூ.4900/– |
| 3 | நிரஞ்சன் ஸ்டுடியோ<br>கோட்டார் | ரூ.5200/– |

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீநாராயணா போட்டோஸ் என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.4023/2017/இ1

**தீர்மானம் எண். 41 – அங்கீகரிக்கப்பட்டது.**

39. இந்நகராட்சி வார்டு எண்.49, தட்டான்விளை OHT அருகில் உள்ள 250mm CI Pumping main ஏற்பட்ட பழுதினை குடிநீர் முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் ரூ.31,000/– மதிப்பீட்டில் திரு.C.குமார் என்பவர் மூலம் பணி செய்ய இருப்பது அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 515/2018/இ2

**தீர்மானம் எண். 42 – அங்கீகரிக்கப்பட்டது.**

40. இந்நகராட்சி வார்டு எண்.49, தட்டான்விளை பார்க் ரோட்டில் உள்ள 300mm & CI Pumping main மற்றும் கேபி. ரோட்டில் உள்ள 8" மற்றும் 5" AC பகிர்மான குழாயில் பழுது ஏற்பட்டு குடிநீர் வீணாவதை தடுப்பதுடன் பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்யவும் குடிநீர் முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் ரூ.70,000/– மதிப்பீட்டில் திரு.C.குமார் என்பவர் மூலம் பழுதுகள் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 516/2018/இ2

**தீர்மானம் எண். 43 – அங்கீகரிக்கப்பட்டது.**

41. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட 52 வார்டு பகுதிகளிலும் குடிநீர் வினியோகம் செய்யும் வீதம் தொடர்பான Chlorination மற்றும் Zonation of water supply Distribution system தொடர்பான வரைபடம், பட்டியல், Chlorination விபரம் சமர்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் எண்.13277/2017/WSI, dt. 01.02.2018–ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட விபரங்கள் தயார் செய்யப்பட்ட வகைக்கு Sundaram Engineering Construction Engineers Contractors, Vadasery –க்கு ரூ.47635/– திரு.T.ராஜா, பொது பணி மேற்பார்வையாளர் வழங்கியதை அன்னாருக்கு வழங்கவும், மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தொகை வழங்கவும் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 1836/2018/இ2

**தீர்மானம் எண். 44 – அங்கீகரிக்கப்பட்டது.**

42. இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு, வடசேரி பேருந்து நிலையம் மற்றும் புத்தேரி மேம்பால தெருவிளக்குகள் அனைத்தும் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 147.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறவேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதில், மேற்படி மதிப்பீட்டில் GST 12% சேர்க்கப்பட்டதில் மதிப்பீட்டு தொகை ரூ.1,48,79,823/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ.1,48,79,823/– அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 10514/2017/இ4

**தீர்மானம் எண். 45 – அங்கீகரிக்கப்பட்டது.**

43. இந்நகராட்சிக்குட்பட்ட வெட்டூர்ணிமடம் – ஆசிர்வாதம் காலனி மனைபிரிவில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். I –ல் உள்ள 60' அகல D.D திட்ட சாலை தொடர்பாகவும் மேற்படி திட்டச் சாலை பகுதியில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக திரு.வில்லியம் ஜெபேஷ் பென்சாம் – என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD) No.19054/2017 and WMP (MD) No.15412/2017 வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் அன்னார் W.P(MD) No.21048/2017 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி இரண்டு வழக்குகளிலுமே ஆணையர் அவர்களை 5–ம் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்டுள்ளது. இரண்டு வழக்குகளும் மதுரை நகராட்சி வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் – அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. W.P(MD) No.19054/2017– தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. மேற்படி வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 17998/2017/எப்1

**தீர்மானம் எண். 46 – அங்கீகரிக்கப்பட்டது.**

44. தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையம் – அரசிதழ் வெளியீடு எண்.288, நாள்.12.09.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – அவர்களின் மின் அஞ்சல் கடிதம் ந.க.எண்.23617/2011/எம்3, நாள்.16.11.2017 –ன் படி நாகர்கோவில் நகராட்சி வார்டுகள் 52–லும் வார்டுகள் மறு வரையறை பணிகள் மேற்கொண்டு கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலகம் வழியாக மாநில மறுவரையறை

ஆணையத்திற்கு சமர்பிக்கும் பொருட்டு 52– வார்டுகளிலும் வரைபடஙகள் தனியார் மூலமாக வரைபடஙகள் தயார் செய்யவும், அதனை பிரிண்ட் எடுக்கவும், மற்றும் கருத்துருக்கள் இணைத்த (43 எண்ணங்கள்) Book – Binding செய்யவும் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **வரைபடங்கள் தயார் செய்தல் (1 to 52 ward Map and New Proposed ward boundary Laying and correction works)** | | **ரூ.** |
| 1 | Heaven Makers Construction<br>Er. P.Inthuja. B.E | 23,700/– |
| 2 | Himalaya Construction<br>Er. K Ashok Kumar | 25,400/– |
| 3 | S.K. Associates<br>Er. P. Saravana kumar | 24,800/– |
| **வரைபடங்கள் Print எடுக்க (A3. Colour Print 658 Nos, A2 Colour Print 66 Nos, A1 Colour Print 16 Nos)** | | **ரூ.** |
| 1 | Heaven Makers Construction<br>Er. P.Inthuja. B.E | 22,160/– |
| 2 | S.K. Associates<br>Er. P. Saravana kumar | 25,290/– |
| 3 | Himalaya Construction<br>Er. K Ashok Kumar | 24,056/– |
| **Book Binding செய்ய (43 எண்ணஙகள்)** | | **ரூ.** |
| 1 | அன்னை அச்சகம்<br>25, மீட்தெரு, நாகர்கோவில் | 4,515/– |
| 2 | ஹெவன் மேக்கர்ஸ் கன்ஸ்டிரக்ஷன்<br>50/9 கிரெஸண்ட் காம்பளக்ஸ், நாகர்கோவில் | 4,945/– |
| 3 | S.K. அசோசியேட்ஸ்<br>15, முனிசிபல் காம்ப்ளக்ஸ் மீட் தெரு,<br>நாகர்கோவில் | 4,730/– |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளகிளில் வரைபடஙகள் தயார் செய்ய குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Heaven Makers Construction, Er. P.Inthuja – நிறுவனத்திற்கும் வரைபடங்கள் பிரிண்ட எடுக்க குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Heaven Makers Construction, Er. P.Inthuja – நிறுவனத்திற்கும் Book Binding செய்ய குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அன்னை அச்சகத்திற்கும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதையும், மேற்படி வரைபடங்கள் தயார் செய்து பிரிண்ட்டுகள் எடுத்து மறுவரையறை கருத்துருக்கள் இணைத்து Book Binding செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலகம் வழியாக மாநில மறு வரையறை ஆணையம் – அவர்களிடம்

சமர்பிக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தொகை வழங்கப்பட்டதையும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 14260/2017/எப்1

**தீர்மானம் எண். 47 – அங்கீகரிக்கப்பட்டது.**

45. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–ல் கருப்புக்கோட்டை, சுடலைமாடன் கோவில் அருகில் உள்ள கழிப்பறையில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள மன்ற தீர்மானம் எண்.539, நாள்.28.04.2017–ன் படி ரூ.98,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 12.05.2017 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1 | திரு.கே. நடராஜன்<br>ஒப்பந்தக்காரர் | – 2.23% அதிகம் |
| 2 | திரு.கே. மணிகண்டன்<br>ஒப்பந்தக்காரர் | – 0.15% குறைவு |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.15% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.கே.மணிகண்டன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.68/17–18/இ1

**தீர்மானம் எண். 48 – அங்கீகரிக்கப்பட்டது.**

46. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10–ல் தோப்பு வணிகர் தெரு பெண்கள் கழிப்பறையில் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள ரூ.95,000/–க்கு மன்ற தீர்மானம் எண்.462, நாள்.28.04.2017–ன் படி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 09.05.2017 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1 | திரு.கே. நடராஜன் | – 2.29% அதிகம் |
| 2 | திரு.கே. மணிகண்டன் | – 0.14% குறைவு |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.14% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.கே.மணிகண்டன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.53/17–18/இ1

**தீர்மானம் எண். 49 – அங்கீகரிக்கப்பட்டது.**

